Series : RQ3SP

SET~4

வினாத்தாள் குறியீடு எண்.
Q.P. Code **6**

வரிசை எண்.
Roll No. | | | | | | | | |

விண்ணப்பதாரர்கள் விடைத்தாளின் முதல் பக்கத்தில் குறி எண்ணை கண்டிப்பாக எழுதவேண்டும்

Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

# தமிழ்
# TAMIL

*கால அளவு: 3 மணி*

*Time allowed : 3 hours*

*மொ. மதிப்பெண்கள் : 80*

*Maximum Marks : 80*

குறிப்பு :

(I) இந்த வினாத்தாளில் அச்சிடப் பெற்ற **15** பக்கங்கள் உள்ளதைச் சரி பார்க்கவும்.

(II) வினாத்தாளின் வலது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Q.P. Code) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்

(III) இந்த வினாத்தாளில் **15** வினாக்கள் உள்ளனவா எனச் சரி பார்க்கவும்.

(IV) எழுதத் தொடங்குவதற்கு முன் வரிசை எண்ணைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிடவும்.

(V) வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.

**NOTE :**

(I) Please check that this question paper contains **15** printed pages.

(II) Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.

(III) Please check that this question paper contains **15** questions.

(IV) **Please write down the serial number of the question in the answer-book at the given place before attempting it.**

(V) 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

**General Instructions :**

*பொதுவான வழிமுறைகள் :*

1. This question paper contains **FIVE** Sections.

   இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.

2. *It has total **15** questions.*

   இவ்வினாத்தாள் *15* கேள்விகளைக் கொண்டுள்ளது.

3. **Section A :** Contains **2** Questions. [Question Number from **1** to **2**]

   பிரிவு அ – **2** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **1** முதல் **2** வரை]

4. **Section B :** Contains **4** Questions. [Question Number from **3** to **6**]

   பிரிவு ஆ – **4** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **3** முதல் **6** வரை]

5. **Section C :** Contains **4** Questions. [Question Number from **7** to **10**]

   பிரிவு இ – **4** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **7** முதல் **10** வரை]

6. **Section D :** Contains **2** Questions. [Question Number from **11** to **12**]

   பிரிவு ஈ – **2** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **11** முதல் **12** வரை]

7. **Section E :** Contains **3** Questions. [Question Number from **13** to **15**]

   பிரிவு உ – **3** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **13** முதல் **15** வரை]

8. Attempt as per specific instructions for each Question.

   கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

9. Please write down the serial no. of the question in the answer book before attempting it.

   விடையளிக்கும் முன் வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.

பகுதி – அ (படித்தல் – 10 மதிப்பெண்கள்)

## SECTION – A (Unseen Passage – 10 Marks)

1. கீழ்க்காணும் பத்தியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : **5 × 1 = 5**

பழந்தமிழர் காதலையும் வீரத்தையும் அன்றி அறிவியலையும் சிந்தித்தனர். அறிவின் நுண்மையே அறிவியல். சிலப்பதிகாரத்தில் வேதியியல் கூறுகளைக் காணமுடிகிறது. மணிகள் (நவரத்தினங்கள்) ஒளிவிடும் தன்மையினால் வேறுவேறு பெயர்களைப் பெற்றுள்ளன. ஆனால், அவற்றின் மூலப்பொருள் ஒன்றுதான் என்பதை இளங்கோவடிகள் கூறுகிறார். இன்றைய அறிவியல் அறிஞர்கள் மணிகள் அனைத்துமே பீனால் பார்மால்டிஹைடு என்ற வேதிப்பொருளால் ஆனது என்கின்றனர். மூலப்பொருள் எது என்பதைதான் இன்றைய அறிவியல் கண்டறிந்துள்ளது. ஆனால், மூலப்பொருள் ஒன்றே என அன்றே பழந்தமிழர் உணர்ந்துள்ளனர்.

வானத்தில் காற்றில்லாப் பகுதியும் உண்டு என்பதை, “வறிது நிலைஇய காயமும்” என்று புறநானூறு கூறுகிறது. வானம் கடலிலிருந்து முகந்த நீரை மழையாகப் பொழிகிறது என்பதை “வான்முகந்தநீர் மழை பொழியவும்” என்று பட்டினப்பாலை கூறுகிறது. வானத்தில் உலவும் கோள்களைப் பற்றி திருத்தக்க தேவர் தான் இயற்றிய சீவகசிந்தாமணியில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பல அறிவியல் செய்திகள் தமிழிலக்கியங்களில் கொட்டிக்கிடக்கின்றன.

வினாக்கள் :

I. மழை பற்றிக் கூறும் இலக்கியம் எது ?

(A) சிலப்பதிகாரம் (B) பட்டினப்பாலை

(C) தேவாரம் (D) திருவாசகம்

II. மணிகளின் மூலப்பொருள் ஒன்று என்று கூறிய புலவர் யார் ?

(A) இளங்கோவடிகள் (B) திருத்தக்கதேவர்

(C) கம்பர் (D) திருவள்ளுவர்

III. 'வறிது நிலைஇய காயமும்' – என்ற தொடர் எதை உணர்த்துகிறது ?

(A) வானத்தில் நீரில்லாப் பகுதியும் உண்டு.

(B) வானத்தில் காற்றில்லாப் பகுதியும் உண்டு.

(C) வானே இல்லை.

(D) நீரே இல்லை.

IV. பழந்தமிழர் எவற்றைச் சிந்தித்தனர் ?

(A) காதலை

(B) வீரத்தை

(C) அறிவியலை

(D) மேற்கண்ட மூன்றையும்

V. அறிவின் நுண்மை எது ?

(A) அறிவு (B) ஆற்றல்

(C) அறிவியல் (D) மூளை

2. கீழ்க்காணும் பத்தியைத் தொடர்ந்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க: **5 × 1 = 5**

ஒரு மொழியின் செழுமை அதன் சொற்களில் உள்ளது. தமிழ், சொல்வளம் மிக்கது. நீர்நிலைக் கட்டுமானங்களுக்கு தமிழன் பல பெயர்களை வைத்துள்ளான். இலஞ்சி, கயம், கேணி, ஏரி, கோட்டகம், மடு, ஓடை, வாலி, சலந்தரம், தடாகம், பொய்கை, குட்டம், குளம், கண்மாய்.... அப்பப்பா..! சொல்லி முடிக்கவே மூச்சு முட்டும்.

இத்தனை பெயர்களும் அதன் பயன்பாட்டைப் பொறுத்து அந்தந்த நீர்நிலைக்கு வைக்கப்பட்டுள்ளன. நீர் ஊற்றுகள் நிறைந்த இடங்களில் அமைந்த நீர்நிலைகளுக்குப் 'பொய்கை' என்று பெயர். தானாகவே நீர் கசிந்து சிறிய அளவில் தோன்றும் நீர் நிலை 'சுனை', 'கயம்' ஆகிய பெயர்களால் வழங்கப்படுகின்றன. மழை நீர் மட்டும் தேங்கியிருக்கும் சிறு நீர்த்தேக்கம் 'குட்டை'. இன்றைக்கு இச்சொல் சாக்கடை என்பதைக் குறிப்பதாக மாறிவிட்டது.

மக்கள் குளிக்கப் பயன்படுவது 'குளம்' அழுக்கைப் போக்கக் குளித்தல் என்பது இன்றைய வழக்கம். ஆனால், அன்றைய குளித்தலில் பொருள் வேறு. பகல் முழுவதும் வயலில் வெயிலில் வேலை செய்து வெப்பமான உடலைக் குளிர்விப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நடைமுறையே குளிர்த்தல். இதுவே காலப்போக்கில் குளி(ர்)த்தல் என்று மாறியது. இது போன்றே பல செய்திகள் சொல்வளத்தால் புலப்படுகின்றன.

வினாக்கள் :

I. இன்றைய வழக்கம் யாது?

II. நீர்நிலைகளின் பெயர்களுள் நான்கினை எழுதுக.

III. ஒரு மொழியின் செழுமை எதில் உள்ளது?

IV. பொய்கை என்பது யாது?

V. இன்றைக்கு 'குட்டை' என்பது எதைக் குறிக்கிறது?

### பகுதி-ஆ (இலக்கணம் – 12 மதிப்பெண்கள்)

### SECTION – B (Grammar – 12 Marks)

3. பிழை நீக்கி எழுதப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக. (எவையேனும் 3 மட்டும்) $3\times 1 = 3$

I. அழைகடல் தன் ஒளியால் கடவுளை வாழ்த்தும்.

(A) அலைகடல் தன் ஒலியால் கடவுளை வாழ்த்தும்.

(B) அளைகடல் தன் ஒலியால் கடவுளை வாழ்த்தும்.

(C) அலைகடல் தன் ஒளியால் கடவுளை வாழ்த்தும்.

(D) அலைகடல் தன் ஒலியால் கடவுலை வாழ்த்தும்.

II. அறசன் எவ்வழி குடிகள் அவ்வழி.

(A) அரசன் எவ்வலி குடிகள் அவ்வலி.

(B) அறசன் எவ்வலி குடிகள் அவ்வலி.

(C) அரசன் எவ்வளி குடிகள் அவ்வளி.

(D) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.

III. கள்வி கற்பது நம் கடமை.

(A) கல்வி கர்ப்பது நம் கடமை.

(B) கல்வி கற்பது நம் கடமை.

(C) கள்வி கற்பது நம் கடமை.

(D) கல்வி கர்பது நம் கடமை.

IV. மலரின் மனம் என் மனதைக் கவர்ந்தது.

(A) மலரின் மனம் என் மனதைக் கவற்ந்தது.

(B) மலரின் மணம் என் மணதைக் கவர்ந்தது.

(C) மலரின் மணம் என் மனதைக் கவர்ந்தது.

(D) மளரின் மணம் என் மனதைக் கவர்ந்தது.

V. நீலவானில் பறவை வட்டமிட்டுப் பறந்தது.

(A) நீளவானில் பறவை வட்டமிட்டுப் பறந்தது.

(B) நீலவானில் பரவை வட்டமிட்டுப் பறந்தது.

(C) நீலவானில் பறவை வட்டமிட்டுப் பரந்தது.

(D) நீலவானில் பறவை வட்டமிட்டுப் பறந்தது.

4. வல்லின மெய்யிட்டுத் திருத்திய தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக.

*(மூன்று மட்டும்))* **3 × 1 = 3**

I. கொத்தி திரியும் கோழியை பிடி.

(A) கொத்தித் திரியும் கோழியைப் பிடி.

(B) கொத்தி திரியும் கோழியைப் பிடி.

(C) கொத்தித் திரியும் கோழியை பிடி.

(D) கொத்தி திரியும்க் கோழியைப் பிடி.

II. அந்த குதிரை ஓடா குதிரை.

(A) அந்த குதிரைய் ஓடா குதிரை.

(B) அந்தக் குதிரை ஓடாக் குதிரை.

(C) அந்த குதிரை ஓடாக் குதிரை.

(D) அந்தக் குதிரை ஓடா குதிரை.

III. கைதொழில் ஒன்றை கற்று கொள்.

(A) கைத்தொழில் ஒன்றை கற்றுக் கொள்.

(B) கைத்தொழில் ஒன்றைக் கற்று கொள்.

(C) கைதொழில் ஒன்றைக் கற்று கொள்.

(D) கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்.

IV. சாரை பாம்பு வாழை தோப்பில் புகுந்தது.

(A) சாரை பாம்பு வாழை தோப்பில்ப் புகுந்தது.

(B) சாரைப்பாம்பு வாழை தோப்பில் புகுந்தது.

(C) சாரைப்பாம்பு வாழைத்தோப்பில் புகுந்தது.

(D) சாரை பாம்பு வாழைத்தோப்பில் புகுந்தது.

V. நமக்கு தெரிந்ததை பிறருக்கு கற்ற தர வேண்டும்.

(A) நமக்குத் தெரிந்ததைப் பிறருக்குக் கற்றுத் தர வேண்டும்.

(B) நமக்கு தெரிந்ததை பிறருக்குக் கற்று தர வேண்டும்.

(C) நமக்குத் தெரிந்ததைப் பிறருக்கு கற்று தர வேண்டும்.

(D) நமக்கு தெரிந்ததை பிறருக்கு கற்றுத் தர வேண்டும்.

5. எடுத்துக் காட்டு எழுதுக : (மூன்று மட்டும்) **3 × 1 = 3**

I. செயப்பாட்டு வினை.

(A) கோப்பை இந்தியாவால் வெல்லப்பட்டது.

(B) கோப்பையை இந்தியா வென்றது.

(C) கோப்பையை வென்றது இந்தியா.

(D) இந்தியா கோப்பையை வென்றது.

II. உணர்ச்சி வாக்கியம்.

(A) அங்கே புலி வருகிறது.

(B) புலி வருவதைப் பாருங்கள்.

(C) ஆ! புலி வருகிறது!

(D) புலி வருகிறதா?

III. அயல் கூற்று.

(A) நாளை பள்ளிக்கு வருவேன்.

(B) அவன் மறுநாள் பள்ளிக்கு வருவதாகக் கூறினான்.

(C) பள்ளிக்கு அவன் வருவான்.

(D) அவன் மறுநாள் வருவான்.

IV. தொடர் வாக்கியம்.

(A) அதியமான் ஔவையைக் கண்டான்.

(B) அதியமான் ஔவையைக் கண்டவுடன் பரிசளித்தான்.

(C) அதியமான் ஔவையைக் கண்டதால் பரிசளித்தான்.

(D) அதியமான் ஔவையைக் கண்டான்; வரவேற்றான்; பரிசளித்தான்.

V. எதிர்மறை வாக்கியம்.

(A) பொறுப்பில்லாதவள் குடும்பத்தலைவி இலள்.

(B) குடும்பத்தலைவி பொறுப்பில்லாதவள்.

(C) குடும்பத்தலைவிக்குப் பொறுப்பு வேண்டும்.

(D) பொறுப்புடையவள் குடும்பத் தலைவி.

6. வழுவற்ற தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக (மூன்று மட்டும்): **3× 1 = 3**

I. (A) அது இங்கே உள.

(B) அவை இங்கே உள்ளன.

(C) அது இங்கே உள்ளன.

(D) அதுகள் இங்கே உள்ளது.

II. (A) கமலா பானை செய்தாள்.

(B) கமலா பானை சுட்டாள்.

(C) கமலா பானை அமைத்தாள்.

(D) கமலா பானை வனைந்தாள்.

III. (A) கண்ணன் அவர்கள் அருகில் சென்றார்கள்.

(B) கண்ணன் அவர்கள் அருகில் சென்றனர்.

(C) கண்ணன் அவர்கள் அருகில் சென்றான்.

(D) கண்ணன் அவர் அருகில் சென்றது.

IV. (A) எழுதப் படிக்கத் தெரிந்து கொள்.

(B) எழுதப் படிக்கத் தெரிஞ்சுகோ.

(C) எழுதப் படிக்கத் தெரிஞ்சுக்கணும்.

(D) எழுதப் படிக்கத் தெரிஞ்சுதா?

V. (A) டீச்சர் நடத்தும் போது கவனி.

(B) டீச்சர் டீச் பண்ணும் போது கவனி.

(C) ஆசிரியர் நடத்தும் போது கவனி.

(D) ஆசிரியர் டீச் பண்ணும் போது கவனி.

## பகுதி – இ (இலக்கியம் – 31 மதிப்பெண்கள்)

## SECTION – C (Main Course Book – 31 Marks)

7. பின்வரும் செய்யுளைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி: **5× 1 = 5**

“முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்”.

**வினாக்கள் :**

I. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ?

(A) கம்பராமாயணம் (B) தேவாரம்

(C) பிறகொருநாள் கோடை (D) திருக்குறள்

II. இந்நூலுக்குக் கம்பர் இட்ட பெயர் யாது ?

(A) கம்பாவதாரம் (B) இராமாவதாரம்

(C) கூர்ம அவதாரம் (D) கல்கி அவதாரம்

III. இது யார் கூற்று?

(A) கம்பர் (B) இலக்குவன்

(C) பரதன் (D) இராமன்

IV. யாருடன் ஐவர் ஆனார்கள்?

(A) இராமன் (B) குகன்

(C) பரதன் (D) சடாயு

V. இப்பாடலின் படலம் யாது?

(A) ஆற்றுப்படலம்

(B) நாட்டுப்படலம்

(C) குகப்படலம்

(D) நட்பு கோட்படலம்

8. கீழ்க்காணும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக. 5x1=5

குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே. குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்து செயல்படுகின்றன, நாணயத்தின் இரு பக்கங்களைப் போல! இன்று நாம் வழங்கும் திருமணம், குடும்பம் ஆகிய இரண்டு சொற்களுமே தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் இடம்பெறவில்லை. குடும்பம் என்னும் சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் பயின்று வருகிறது. சங்க இலக்கியத்தில் குடம்பை, குடும்பு, கடும்பு ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை. 'குடம்பை' என்ற சொல் இருபது இடங்களில் பயின்று வருகிறது. குடும்பம் என்ற சொல் 'கூடி வாழ்தல்' என்னும் பொருள்படுகிறது.

'குடும்பு' என்ற சொல்லுடன் 'அம்' விகுதி சேர்த்து குடும்பம் என்ற சொல் அமைந்தது. குடும்பம் என்னும் அமைப்புடன் வாழ்ந்த இடங்கள் பற்றிய பல குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. தொல்காப்பிய நூற்பா ஒன்று இல், மனை என்னும் இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகிறது.

*வினாக்கள்:*

I. குடும்பம் என்ற சொல்லின் விகுதி யாது?

II. இப்பத்தியில் கூறப்பட்ட இலக்கண நூல் எது?

III. இல், மனை இரண்டும் எதைக் குறிக்கிறது?

IV. திருமணம் எதற்கு அடிப்படை?

V. குடம்பை என்ற சொல் எத்தனை இடங்களில் வருகிறது?

9. பின்வரும் வினாக்களில் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. **2 × 3 = 6**

I. 'பிறகொரு நாள் கோடை' கவிதையில் கவிஞர் யாது கூறுகிறார்?

II. தெய்வமணி மாலையில் கந்தவேளிடம் வள்ளலார் யாது வேண்டுகிறார்?

III. நெடுநல்வாடையில் கோவலர் வருத்தத்தையும் விலங்குகளின் செயல்களையும் கவிஞர் வழி விளக்குக.

IV. அகநானூற்றுப் பாடலில் அமைந்த உள்ளுறையை விளக்குக.

10. பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க : **3× 5 = 15**

I. கலை முழுமை – விளக்குக.

II. பேரிடர் நிகழும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை யாது ?

III. விரிந்த குடும்பம் பற்றி பக்த வத்சல பாரதி யாது கூறுகிறார் ?

IV. சென்னையின் தொன்மை – விளக்குக.

V. பேரிடர் மேலாண்மை ஆணையம் – குறிப்பு வரைக.

பகுதி –ஈ (துணைப்பாடம் – 12 மதிப்பெண்கள்)

**SECTION – D (Non-detail – 12 Marks)**

11. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக : **7 × 1 = 7**

I. முதல் கல்

II. முகவரி இழந்த தலைக்குளம்

III. உரிமைத் தாகம்

12. கீழக்காணும் கதை மாந்தரில் ஒருவரின் பண்பு நலனை எழுதுக. **5 ×1 = 5**

I. அல்லி

II. வெள்ளைச்சாமி

## பகுதி – உ (படைப்புத்திறன் – 15 மதிப்பெண்கள்)

## SECTION – E (Creative Writing – 15 Marks)

13. பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக. **6 × 1 = 6**

I. உன் வீட்டிற்குக் குடிநீர் இணைப்பு வழங்க வேண்டி மாநகர குடிநீர் வடிகால் வாரிய பொறியாளருக்கு விண்ணப்பம் வரைக.

II. உன் நடன அரங்கேற்ற விழாவிற்கு உன் நண்பனை அழைத்து மடல் எழுதுக.

*(உனது முகவரி : அ. மணி/அ. மலர், 15, பாரி தெரு, முல்லை நகர், கோயம்புத்தூர் – 24)*

14. உன்னைக் கவர்ந்த ஒரு விளையாட்டு வருணனையாளரை நேர்காணல் செய்க. **1 × 3 = 3**

15. பின்வரும் தலைப்புகளுள் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக. **1 × 6 = 6**

I. நோய்க்கு இடம் கொடேல்.

II. சிறுசேமிப்பின் சிறப்பு.

III. என் எதிர்காலத் திட்டங்கள்.